**செய்தி வெளியீட்டு எண்–181** **நாள்:26, 2.,2010**

## <u>8/03/2010 அன்று மகளிர் தினத்தையொட்டி சென்னை தீவுத்திடலில் நடைபெறும் இந்திய சுற்றுலா – தொழில் பொருட்காட்சியில் மகளிருக்கு இலவச அனுமதி.</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 22.12.2009 அன்று சென்னை தீவுத்திடலில் தொடங்கி வைக்கப்பட்ட 36வது இந்திய சுற்றுலா – தொழில் பொருட்காட்சிக்கு இதுவரை 11 லட்சத்து 40 ஆயிரம் பேர் வருகை புரிந்துள்ளனர். கடந்த 22.12.2009 அன்று 36வது இந்திய சுற்றுலா – தொழில் பொருட்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த பொருட்காட்சியில் 25 மாநில அரசுத் துறைகளின் அரங்குகள் , 13 அரசுத் துறை நிறுவனங்களின் அரங்குகள், 4 மத்திய அரசு நிறுவனங்களின் அரங்குகள், 2 இதர மாநில அரசுத் துறைகளின் அரங்குகள் என மொத்தம் 44 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுதவிர 27 விற்பனை அரங்குகளும், 115 கடைகளும் இப்பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

பொது மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றுள்ள இப்பொருட்காட்சியினை இதுவரை மொத்தம் 11 லட்சத்து 40 ஆயிரம் பேர் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இதுதவிர இரண்டரை லட்சம் மாணவ – மாணவியரும் குடும்பத்துடன் பொருட்காட்சியினைப் பார்வையிட்டுள்ளனர். இப்பொருட்காட்சியின் வாயிலாக இதுவரை 1 கோடியே 59 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

வருகிற 8.3.2010 உலக மகளிர் தினமாகக் கொண்டாடப்படுவதால், அந்நாளில் சுற்றுலா தொழில் பொருட்காட்சிக்கு வரும் அனைத்து மகளிரும் நுழைவுக் கட்டணம் ஏதுமின்றி பொருட்காட்சியினைப் பார்வையிட இலவசமாக அனுமதிக்கப்படுவர். மகளிர் தினத்தன்று அண்ணா கலையரங்கில் நடைபெறவிருக்கும் கலைநிகழ்ச்சிகள் அனைத்தும் மகளிராலேயே நடத்தப்படுகிறது.

இப்பொருட்காட்சி வருகிற 14.03.2010 அன்று நிறைவு பெறுகிறது. பொது மக்கள் அனைவரும் பொருட்காட்சியினைக் கண்டு மகிழுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு– இயக்குநர், செ.ம.தொ., தலைமைச் செயலகம், சென்னை–9,**